REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ வெளியூர்களில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 10உ திங்கள் (24—6—57) ★ ★ வெளியூர்: ஆனி 11உ செவ்வாய் (25—6—57) [இதழ் 8

டுனீஷியாவின் எச்சரிக்கை பலன் தருகிறது!

பாரீஸ், ஜுன் 22—

டுனீஷியாவிலிருந்து தனது துருப்புகளைத் திரும்பப் பெறுவதுபற்றி பிரெஞ்சு சர்க்கார் யோசித்து வருகிறதாம்!

இப்போது டுனீஷியாவில் உள்ள சுமார் 30,000 பிரெஞ்சுத் துருப்புகளை அல்ஜீரிய எல்லைக்குள் கொண்டு வந்து இருநாடுகளின் எல்லைகளையும் பாதுகாப்பது என்று ஒரு திட்டம் பரிசீலிக்கப்படுகிறதாம்.

டுனீஷியாவில் பிரெஞ்சுத் துருப்புகள் அண்மையில் அட்டகாசச் செயல்களில் ஈடுபட்டபோது டுனீஷியப் பிரதமர், 'அட்டகாசம் நீடித்தால் யுத்தம் மூளும்' என எச்சரித்திருந்தது நினைவிருக்கலாம்.

காலில் குத்திய முள்ளை மற்றவர் பாதை நடுவில் போட்டனர்

வீதி ஓரத்தில் அதை வீசி எறிந்து பாதுகாப்புத் தேடுகிறது தி. மு. கழகம்

பட்டை தீட்டிய வைரத்திற்கும் மெருகு பூசாத தங்கத்திற்கும் வேறுபாடு உண்டு

வெள்ளையாயிருப்பதால் வெற்றிலை போடுவதற்கு வெண்ணெய் பயன்படாது

நமது சமுதாயக் கொள்கைகளை விளக்குகிறார் மு. கருணாநிதி

16—6—57 அன்று மாலை சென்னை—மவுண்ட்ரோட் பகுத்தறிவுப் பாசறை நூல் நிலைய ஆண்டுவிழாவில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய பேருரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

"'பகுத்தறிவு' எனக் கேள்விப்படும் நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெயர்தான் எல்லோருக்கும் நினைவில்வரும். அதனால் மற்றவர்களுக்குப் பகுத்தறிவே கிடையாதா என்றால், கிடையாதென்பதல்ல — அவர்கள் பயன்படுத்தும் முறை வேறாக இருக்கிறது. நாம் பட்டை தீட்டப்பட்ட வைரமாக இருக்கிறோம்—மற்றவர்கள், மெருகு பூசப்படாத தங்கமாக இருக்கிறார்கள். இவைதான் நமக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம்.

"திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் தனது கொள்கைகளை மக்களிடை அவ்வப்போது எடுத்துவைத்துப் பேசுகிறது; இந்த நாட்டின் அரசியல்—சமுதாய—பொருளாதார விடுதலைக்கும், அதன் முன்னேற்றத்திற்கும் பாடுபடும் ஒரே இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் இருந்துவருகிறது.

"திராவிட முன்னேற்றக் கழகம், சமுதாயத்தில் உண்மையான பகுத்தறிவை வளர்க்க வேண்டியது தனது இன்றியமையாத கடமையாகக்கொண்டிருக்கிறது; சமுதாயம் ஏற்றம் பெற்றாகவேண்டும்—வளர்ச்சி பெற்றாகவேண்டுமென்று கருதுகிறது. சமுதாயம் வளர்ச்சி பெற்றாலன்றி, இந்த நாட்டு அரசியலிலும், பொருளாதாரத்திலும் விழிப்புணர்ச்சி ஏற்படாதென்பதை நாம் அடிக்கடி சொல்லிவருகிறோம். எனவேதான், திராவிட முன்னேற்றக் கழகம், நாட்டில் 'அங்கிங்கெனாதபடி' எங்கும் தனது அரசியல்—பொருளாதார—சமுதாயக் கொள்கைகளான இம்மூன்றுக்கும் பாடுபட்டுவருகிறது.

"தென்னகத்தில் மிகப் பிரசித்தமானதாக இருந்துவந்திருக்கிறது இம் 'மூன்று' என்பது!

"தென்னகத்தைச் சுற்றியுள்ளக் கடல்கள் மூன்று; வங்காளக் குடா கடல் — அரபிக்கடல் — இந்துமகா சமுத்திரம்!

"இந்தக் கடல்களில் கிடைக்கின்றதே முத்து—அது மூன்று எழுத்தைக்கொண்டது!

"இந்த வளம் நிறைந்த தென்னகத்தை ஆண்ட மன்னர்கள் மூன்று பேர்; சேர—சோழ—பாண்டியர்! அவர்களுக்கிருந்த கொடிகள் மூன்று; விற்கொடி—கயல் கொடி—புலிக்கொடி! அவர்கள் வளர்த்தத் தமிழ் மூன்று இயல் தமிழ்—இசைத் தமிழ்—கூத்துத் தமிழ்! அவர்கள் வைத்திருந்த முரசும் மூன்றுதான்.

"அத்தகைய தமிழகத்தில். சமுதாயத்தில் மறுமலர்ச்சிக்கு பாடுபட முதன்முதலாக வந்தவர் மூன்றெழுத்தால் ஆனவர் ஈ. வே. ரா.! அவரைப் பின்பற்றிய நமது அண்ணா அவர்களும் மூன்றெழுத்தால் ஆனவர்! அண்ணாவின் தலைமையிலே இயங்கிவருகிற நமது கழகம்—தி. மு. க.! அத்தகைய கழகம் அரசியல் - பொருளாதாரம்- சமுதாயம் எனும் அருமையான மூன்று கொள்கைகளுக்காக பணியாற்றிவரும் இயக்கமாகும்.

"நாம் அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம் இம்மூன்றையும் என் ஒன்று சேர்த்துப் பேசுகிறோம் என்றால், இந்த நாட்டுக்கு அரசியலும்—பொருளாதாரமும், அழகான வீணையென்றால், அதை மீட்டும் பெண்ணாக சமுதாயத்தைக் கருதுகிறோம்.

"அரசியல் வில்லாகவும்—பொருளாதாரம் அம்பாகவும் இருந்தால், அதற்கு நாண் சமுதாயமாகக் கருதுகிறோம்.

"அரசியல் வெற்றிலையாகவும் - பாக்கு பொருளாதாரமாகவும் இருந்தால், சுண்ணும்பு சமுதாயமாகத் தேவைப்படுகிறது.

"ஆனால், 'வெற்றிலையும் - பாக்கும் மட்டுமே போதுமே - வாய் சிவந்து விடுமே' இப்படியும் சொல்கிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்; அவர்கள், இந்த நாட்டிலுள்ள காமராசர் கூட்டத்தார்! மற்றொரு கட்சி, 'ஏன், வெற்றிலையும் - பாக்கும் மட்டும் போதாதா? வேண்டுமானால், வெண்ணெயும் வெண்மைதான்- சுண்ணும்பும் வெண்மைதானே! வெண்ணெயைப் பயன்படுத்திக் கொள்ளலாமே?' -கேட்பவர்கள், இந்த நாட்டிலுள்ள பொதுவுடைமைவாதிகள்!

"நமது நாட்டில் இம்மூன்று மூலாதாரக் கொள்கைகளுக்கும் போராடினால்தான் நல்ல ஒரு சமுதாயம் மலரமுடியும். பகுத்தறிவை மனிதன் தோன்றும்போதே பெற்றான் என்றால், மனிதன் பிறக்கும் போதே பெற்றுவிடவில்லை பகுத்தறிவை.

"மனித சமுதாயம் வளர்ந்த வரலாற்றை எடுத்துப் பார்த்தால், ஆரம்பக் கட்டத்தில் மனிதன் எவ்வாறெல்லாம் இருந்திருக்கிறான் என்பது தெரியும். மனிதன் ஆரம்ப நிலையில், தாய்—மகள் என்ற வித்தியாசம் தெரியாமல், அதன் உணர்ச்சியின் தன்மையை அறியாமல் காட்டுமிராண்டித்தனமாக வளர்ந்தான். பின்னர்தான் கொஞ்சம் கொஞ்சமாக அவனது சிந்தனை வளர்ந்தது. அவனது சிந்தனையால் ஓரளவு பக்குவ நிலையை பெற்றுவரும் போதுதான், அந்த சிந்தனையை நல்ல வழியில் வளரவிடாமல் தங்களுக்கு அடிமையாக்கிக் கொள்ள நினைத்தார்கள் ஒரு கூட்டத்தார்! அவர்கள் நினைத்ததைச் செயலாற்ற இந்த மக்களிடையே சடங்கு சம்பிரதாயத்தைப் புகுத்தினார்கள். பின்னர் அவைகளைக் கொண்டே ஒரு பெரிய சமுதாயத்தை ஆட்டிப் படைத்தார்கள்! ஒரு பெரிய சமுதாயம் கடவுள் — புராணம் — நரகம் — மோட்சம் என்ற இவைகளின் பெயரால் அடிமைப்பட்டது. இந்த வரலாற்று உண்மையைக் காட்டி நாம் மக்களிடையே விழிப்புணர்ச்சியூட்டி வருகிறோம்.

"இந்த நாட்டில் நாம் கடவுள்களைப் பார்க்கிறோம்; ஆனால் இதைவிட மோசமான கடவுள்களை மேற்கத்திய நாட்டு மக்கள் வைத்திருந்தார்கள். மேல்நாடுகளில் 'அப்போலா', 'ஹெர்கு

(4-ம் பக்கம் பார்க்க)

ஆரிய சமாஜிகள் ஆர்ப்பாட்டம்

கசப்பை வளர்க்கும் வகுப்புவாத தீயை மூட்டும்

பண்டிதர் எச்சரிக்கை

புதுடில்லி, ஜுன் 23—

'இந்திக்கு ஆதிக்கம் கோரி பஞ்சாப் மாநிலத்தில் ஆரிய சமாஜிகள் நடத்தும் கிளர்ச்சி, வகுப்புவாதத்தை ஊக்குவிக்கவும், கசப்பை வளர்க்கவுமே உதவும்' என்று பண்டித நேரு கூறியிருக்கிறாராம்.

'ஆரிய சமாஜம் போன்ற மத ஸ்தாபனங்கள், அரசியல் காரியங்களில் ஈடுபடுவது ஏனோ?' என்றும் அவர் கேட்டிருக்கிறாராம்.

ஆரிய சமாஜத் தலைவரின் பகிரங்கக் கடிதம் ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு பண்டிதர் கூறிவிட்டு, ஆரிய சமாஜிகளின் போராட்டம் அரசியல் நோக்கமுடையது என்றும், மொழிப் பிரச்சினையை வெறும் சாக்காகக் கொண்டே போராட்டம் தொடர்ந்து நடத்தப்படுகிறது என்றும், இந்தியாவில் ஒவ்வொருவரும், தங்கள் பிரதேச மொழியன்னியில் வேறொரு இந்திய மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமெனத் தாம் விரும்புவதாகவும், வடவர், தென்னாட்டு மொழிகளில் ஒன்றைக் கற்க வேண்டும் என்றும் பண்டிதர் கூறியிருப்பதுடன், 'ஆரிய சமாஜிகள் போராட்டத்தைக் கைவிட வேண்டும்!; என்றும் கேட்டிருக்கிறாராம்.

முடியாது

ஆனால், 'பண்டிதரின் கடிதம், தகராறுக்குட்பட்டுள்ள அடிப்படை அம்சங்கள் பற்றி எந்தவித முடிவும் கூறாததால், போராட்டத்தைக் கைவிட முடியாது' என்று 'இந்தி ரட்ச சமிதி' முடிவு செய்திருக்கிறதாம்!

'குற்றம் புரியும் போலீஸ் அதிகாரிகளுக்கு சர்க்கார் பாதுகாப்பு தருகிறது'

சட்டசபையில் காங்கிரஸ்காரர் குற்றச்சாட்டு

பாட்னா, ஜுன் 20—

பயங்கரமான குற்றங்களை புலன் விசாரணை செய்யப்படுவதை வேண்டுமென்றே தாமதப் படுத்தித் தடை செய்யும் போலீஸ் அதிகாரிகளுக்கு காங்கிரஸ் சர்க்கார் பாதுகாப்பு அளிப்பதாகக் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர், பீகார் சட்டசபையில் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

ஜோகேஸ்வர ஜா என்ற அந்த உறுப்பினர், கொள்ளை கொடுத்த சிலர் பிடித்துக் கொடுத்த குற்றவாளியை, ஒரு போலீஸ் அதிகாரி விடுவித்துவிட்டதாகவும், ஒரு சப்-இன்ஸ்பெக்டர் தனது மேலதிகாரிகள் அனுப்பிய இடமாற்ற உத்தரவை மீறியதாகவும் தகவல் தந்திருக்கிறார்.

எதிர்க்கட்சியினரும் இது போன்ற குற்றச்சாட்டுகளைக் கிளப்பினர்.

விவாதத்திற்குப் பதிலளித்த உதவி மந்திரி, இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் சம்பந்தபட்ட அதிகாரிகளுக்குத் தகுந்த தண்டனை அளிப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறாராம்.

அசாம் எங்கும் கண்டன முழக்கம்

டில்லிக்கு எதிராகப் போர்க்குரல்

கௌஹாத்தி, ஜுன் 22—

அசாம் மாநிலத்தில் உள்ள எல்லா பிரதான நகரங்களிலும், மாநிலத்தில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவ மறுத்து பீகாரில் நிறுவுவதென டில்லி செய்துள்ள முடிவுக்கு எதிராகப் போர் முழக்கம் எழுப்பப்பட்டிருக்கிறது.

நகரங்கள் எங்கும், இடதுசாரிக் கட்சியினர் ஒன்றுகூடி மக்களைத் திரட்டி ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடத்தி டில்லிக்கு எதிரான கண்டனக் குரலை வலுக்கச் செய்திருக்கின்றனர்.

கூட்டங்களில் காரசாரமான சொற்பொழிவுகளுக்குப் பிறகு டில்லியின் போக்கைக் கண்டித்தும், அசாமில் தொழிற்சாலை நிறுவக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. 'அசாமில் தொழிற்சாலை கிடையாது என்று இறுதி முடிவு கூறப்படுமானால், மக்கள் எந்த நிலையையும் சந்திக்கத் தயாராக இருக்கவேண்டும்,' என்றும் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

★

மேலிடம் மிரட்டுகிறது!

அசாம் மாநில காங்கிரசாரை, மாநிலத்தில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள் இவற்றில் கலந்துகொள்ளக் கூடாது என்று, காங்கிரஸ் மேலிடம் மிரட்டியிருக்கிறது!

இந்த மிரட்டலுக்குத் தவிர்க்க முடியாமல் பயந்துபோய், இடதுசாரிகள் நடத்திய ஆர்ப்பாட்டங்களிலும், கூட்டங்களிலும் காங்கிரசார் கலந்துகொள்ளாமல் ஒதுங்கி நின்றிருக்கின்றனர்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 24—6—57 திங்கள்

பிடிவாதம் நீடிக்குமா?

சூதாட்டத்தில் தோல்விகள் பெருகும்போதுதான் ஆட்டத்தில், ஒருவனுக்கு பிடிப்பும் பிடிவாதமும் நெருக்கமாகும்; அந்தப் பிடிவாதமே அவனது தோல்வியை முழுமைபெறச் செய்யும் என்று கூறுவார்கள்.

இந்த மனப்போக்கு, ஆதிக்கக்காரர்களுக்கும் உள்ளதுதான் என்பதை தொன்மையான வரலாறு மட்டுமல்ல; நமது தலைமுறையில் நிலவும் ஆதிக்கங்களின் வரலாறே கூறும்.

பெரிய சாம்ராஜ்யம் எங்களது எனக் கொண்டாடிய பெருமை, போலியானது எனக் கேலிக்குரியதாக்கப்படுகிறதே என்ற ஏக்கமும், அனுபவித்துக் கொண்டிருந்த சுகபோகங்கள் சுருங்குகின்றனவே என்ற எதிர்காலம் பற்றிய அச்சமும் உள்ளத்தைக் குடையும்போது, ஏகாதிபத்தியவாதிகளின் முகங்கள் சாம்புகின்றன—வெளுத்துப்போய் தொங்குகின்றன.

உள்ளத்தை வருத்தும் அந்த ஏக்கமும்—அச்சமும் கீழ்த்தரமான சிந்தனைகள் பலவற்றைத் தூண்டுவதுடன், சூதாட்டக்காரனின் பிடிவாதத்தையும் அவர்களுக்குத் தருகின்றன. எஞ்சியுள்ள ஆதிக்கக் கோட்டைகளையாவது பறிபோகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற நப்பாசை அந்தப் பிடிவாதத்தின் பிள்ளையாகிறது.

நப்பாசையோ, ஆதிக்கக் கோட்டைகளை அசைக்க முற்படுவோர் மீது, தகர்க்கப் புறப்பட்டுவிட்டோர் மீது, மிருகத்தனமான — காட்டுமிராண்டித்தனமான கொடுமைகளைக் கட்டவிழ்த்து விடுகிறது. இந்தக் கேவலமான ஆதிக்கப் பேராசையால் அலைக்கழிக்கப்படும் ஏகாதிபத்தியவாதிகளின் உள்ளத்திற்கு, ஆதிக்கம் நிலைக்காது என்ற உண்மை மட்டும் என்னவோ தெரியத்தான் செய்யும். என்றாலும், 'பார்ப்போமே கடைசி வரையில்' என்ற நப்பாசை உண்மை காட்டும் வழி நடக்கத் தூண்டுவதில்லை.

இந்த நிலையில்தான் இன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இருக்கிறது.

தனது முன்னைய காலனிகளில் பல சுதந்திரம் பெற்றுவிட்ட நிலையில் இன்று தன்னை நண்பனாக ஏற்றுக்கொள்ளவே மறுக்கின்றன என்றாலும், எஞ்சியுள்ள காலனிகளில் எழும் சுதந்திரக் கோரிக்கைகளை மதித்து, தனது ஆதிக்கக் கொடியை இறக்கிக்கொள்ள பிடிவாதமாக மறுத்துவருகிறது, பிரிட்டன்; பிடிவாதம் காட்டுகிறது. ஆதிக்கக்காரர்களின் பிடிவாதம் தற்காலிக மனச் சாந்தியைத்தான் தேடித்தர முடியும். வெற்றி பெறுவதே இல்லை என்பது பிரிட்டன் சுயமாக அனுபவித்துக் கொண்டிருக்கும் வேதனைதானே. சொல்லித் தெரிய வேண்டியதல்லவே!

சைப்ரஸ் தீவு, பிரிட்டனின் ஆதிக்கப்பிடிப்பிலிருந்து சுயநிர்ணய உரிமை-சுதந்திரம் கோருகிறது. இந்தக் கோரிக்கைக்கான நியாயங்களில், தூசிகூட இடம் பெற்றிருக்கவில்லை. அத்தனை தெளிவானவை. ஆனாலும், பிரிட்டனுக்கு மட்டும் இவற்றின் தெளிவு இன்னும் புலப்பட்டதாகக் காணோம்.

கோரிக்கை மதிக்கப்படாமற் போனதால் மேலும் புண்படுத்தப்பட்ட சைப்ரஸ் மக்கள், மகாரியஸ் பாதிரியாரின் தலைமையில் திரண்டு தங்களின் சுதந்திர தாகம் காட்டிய வழியில் போராட்ட நடைபோடத் துவங்கினர். அவர்கள் நடந்த பாதை, உலகம் ஒப்புக்கொண்டிருக்கிற, அனுமதித்திருக்கிற ஜனநாயக வரம்புகளால் எல்லை கட்டப்பட்டதுதான். ஆனால், தனது ஆதிக்கம் மேலும் குன்றுவது காணத் தாளாத பிரிட்டன், வழி நடத்திச் சென்ற மகாரியஸ் பாதிரியாரை நாடு கடத்திற்று. ஆனாலும் சைப்ரஸ் மக்களை, இந்த நாடு கடத்தலோ, அல்லது பிரிட்டன் கட்டவிழ்த்த இதர தூக்குத் தண்டனை போன்ற கொடூர அடக்குமுறைகளோ விடுதலைப் பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளுவதைத் தடுக்கமுடியவில்லை; ஆனால் சிலரைத் தீவிரவாதிகளாக்கிற்று.

உலகெங்கிலுமுள்ள விடுதலை விரும்பிகள் எழுப்பிய கண்டனக் குரல்களும், சைப்ரஸ் மக்களின் தீவிரமும், உறுதியும் பிரிட்டனின் போக்கில் ஒரு சிறு மாறுதலைத் தோற்றுவித்தன; மகாரியசை விடுவித்தன; ஆனால் பிடிவாதத்தைத் தளர்த்தவில்லை.

இப்போது, சைப்ரஸ் விடுதலை வீரர்கள், மிகக் கொடூரமான—பிலேச்சத்தனமான, கற்காலத்திய முறைகளில் சித்திரவதை செய்யப்படுவதாக மகாரியஸ் பாதிரியார் கடந்த வாரம் தெரிவித்திருக்கிறார்.

இதுபோன்ற சித்திரவதைகளின் காணச் சகியாத காட்சிகளால், சைப்ரஸ் மக்கள் உள்ளத்தில் நிரம்பிவழியும் சுதந்திர வேட்கையைக் கருக்கிவிடலாம் என, பிரிட்டன் கருதுகிறதா? பொங்கிவரும் விடுதலை ஆர்வப் புனலில் எதிர் நீச்சலடிக்க நினைக்கிறதா? இயற்கையாகக் கொந்தளித்துச் சீறிப் பாயும், சுதந்திர ஆசை அலைகளால் சிதறடிக்கப்படாமல் தங்கள் ஆதிக்கப் படகினை சைப்ரசில் நங்கூரம் பாய்ச்சி விடலாம் எனக் கனவு காண்கிறதா? பல முறை மண் கண்டுவிட்ட பிறகும், பிரிட்டன் ஏன்தான் இது போல, தன் முதுகை அசிங்கப்படுத்திக்கொள்ள நினைக்கிறதோ?

மகாரியசுடன் பேச்சு வார்த்தை நடத்தமாட்டோம் என்று பிடிவாதம் செய்கின்றனர் பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தினர், மாக்மில்லன் கோஷ்டியார்.

ஆனால் அதே நேரத்தில், அலங்காராதிகள் செய்து வேஷம் கட்டி, 'நாங்கள் பேசக் கூடிய தலைவர் இவர்தான்' என்று சுட்டிக்காட்ட ஒரு 'பொம்மை'யைக்கூட சைப்ரசில், பிரிட்டனால் கண்டுபிடிக்க முயற்சித்தும் முடியவில்லையே!

எத்தனையோ முறை பிடிவாதம், தனக்கு அவமானகரமான தோல்விகளையே தந்த பின்னும், நப்பாசை பெற்றெடுத்த பிடிவாதத்திற்கு ஏன்தான் இன்னும் பிரிட்டன் சீராட்டும் தாலாட்டும் தருகிறதோ?

துருக்கியரை கிரேக்கருக்கு எதிராகத் தூண்டிவிட்டு, ஆதிக்கத்தை நீடித்துக்கொள்ளலாம் என்ற கனவு, கனவாகவே கலைந்துவிட்டது. கொடிய அடக்குமுறை முயற்சி மலடியாகவே போய்விட்டது. இந்தத் தோல்விகளுக்குப் பிறகும், பிரிட்டன் பிடிவாதம் காட்டுவது, மகாரியஸ் பாதிரியார் போன்றவர்களின் மிதவாத சிந்தனையையும், தீவிரத்தின் பக்கம் திருப்பவே உதவுமே தவிர, தனது ஆதிக்கக் கொடி மரம் சாயாமல் காப்பாற்ற உதவாது என்பதை உணருவதில் துரிதம் காட்டுவதுதான் தனது ஆதிக்க எல்லைகள் சுருங்கிக்கொண்டேவரும் இந்த காலகட்டத்தில், பிரிட்டன் மேற்கொள்ளக்கூடிய ஒரே ஒரு விவேகமான செயலாகும்.

அந்த விவேகம் இருப்பதாக, 'மாக்மில்லன் கம்பெனி' நடைமுறையில் காட்டிக்கொள்ளுமா? அல்லது பிடிவாதமே நீடிக்குமா?

கைதிகளுக்குப் புது வாழ்வு?

புதுடில்லி, ஜுன் 22—

குற்றவாளிகளைத் தண்டித்து சிறைக்கு அனுப்புவதைவிட, அவர்களைச் சீர்திருத்தி நல்வாழ்வளிப்பதே சிறந்த முறையாகும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு மத்திய அரசாங்கம், சீர்திருத்த வேலைகளுக்கான மத்திய நிறுவனமொன்றை ஏற்படுத்தியுள்ளது.

இத்துறையில், நாடு முழுமைக்கும் ஒரே மாதிரியான திட்டமொன்றை இந்த நிறுவனம் வகுக்குமாம்.

25 இலட்சம் பேர்களை குறைத்துக்கொள்வதற்கு அமெரிக்கா தயாராம்!

இலண்டன், ஜுன் 22—

இங்கு நடைபெறும் ஐ. நா ஆயுத குறைப்பு துணைக் குழுவின் கூட்டத்தில் படை குறைப்புக்கு அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ளது.

ஓராண்டு காலத்திற்கு ரஷ்யாவும், அமெரிக்காவும் தமது துருப்புகளை 25 இலட்சமாகக் குறைப்பதற்கான உடன்பாட்டில் கையெழுத்திட வேண்டுமென அமெரிக்கா ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தது.

எவ்வித அரசியல் நிபந்தனையுமின்றி அணு ஆயுத பரிசோதனைகளைத் தடை செய்யவும் 25 இலட்சம் இராணுவத்தினரைக் குறைத்துக்கொள்ளவும் அமெரிக்கா தயாராக இருக்கிறதாம்.

நெய்யில் கலப்படம்

கண்டுபிடிக்கப் புதிய முறை

புதுடில்லி, ஜுன் 22—

தற்போது நாட்டில், நல்ல நெய்—அசல் நெய் என்று விற்கப்படும் நெய், பெரும்பாலும் தாவர எண்ணெயைச் சேர்த்து கலப்படம் செய்யப்பட்டதாகவே இருக்கிறதாம்! அதிகாரபூர்வமாகவே இத்தகவல் தரப்பட்டிருக்கிறது.

எனவே, அசல் நெய் உருகும் உஷ்ண நிலையைக்கொண்டு கலப்படத்தைக் கண்டறியும்ஒருமுறையை மைசூரிலுள்ள மத்திய உணவு தொழில் நுட்ப ஆராய்ச்சி கழகம் உருவாக்கியுள்ளதாம்.

அமெரிக்காவுக்கு இந்திய வெள்ளி

கப்பலில் ஏற்றி அனுப்புகிறது இந்தியப் பேரரசு

கடந்த இரண்டாவது உலக யுத்தத்தின்போது அமெரிக்கா, இந்தியாவிற்கு மொத்தம் 2,260 இலட்சம் அவுன்ஸ் வெள்ளியை, யுத்தகாலக் கடன் குத்தகைத் திட்டம் என்ற பெயரில் கடனாகத் தந்ததாம். இதில் 1,720 இலட்சம் அவுன்ஸ் வெள்ளியை திருப்பித் தருவதாக இந்திய சர்க்கார் ஒப்புக்கொண்டிருந்ததாம்.

மேற்கண்ட ஒப்பந்தப்படி, இந்தியா, இப்போது, இரண்டாவது முறையாக 228 டன் எடையுள்ள 6,493 வெள்ளிக் கட்டிகளை அமெரிக்காவுக்குக் கப்பல் மூலமாக ஏற்றி அனுப்பியிருப்பதாகவும், முதல் தவணையாக கடந்த மே மாத இறுதியில் சுமார் 93 டன் எடையுள்ள 3,020 வெள்ளிக் கட்டிகளை அனுப்பியது என்றும் தெரியவருகிறது.

இந்தியா, அமெரிக்காவிற்குத் திருப்பித் தருவதாக ஒப்புக்கொண்ட கடன் முழுவதையும், இன்னும் 6 தவணைகளில், கப்பல் மூலம் வெள்ளிக் கட்டிகளாக ஏற்றி அனுப்பித் தீர்த்துக் கொள்ள இருப்பதாகவும் கூறப்படுகிறது.

வடநாட்டிற்கே பயன்பட்ட இயந்திரப் பிரிவு!

இரு பிரிவைக் கலைப்பதற்குக் காரணம் என்ன?

புதுடில்லி, ஜுன் 22—

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் நிலத்தை உழும் 'இயந்திரப் பிரிவு' ஒன்று அமைக்கப்பட்டதாம்.

270 'டிராக்டர்' இயந்திரங்கள் இந்த அமைப்பில் வேலை செய்துள்ளன.

இப்பிரிவிலுள்ள 34 இயந்திரங்கள் பயன்படாது என்றும், 26-இயந்திரங்கள் பழுதபட்டுள்ளன என்றும் தெரியவருகிறது. இதனால், இப்பிரிவிலுள்ள இரு பகுதிகள் கலைக்கப்படும் என்றும், 90-நுணுக்க இயந்திர ஓட்டிகள் வேலை இழப்பர் என்றும் தெரியவருகிறது.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் மொத்தம் 15,00,000 ஏக்கர் நிலத்தை பண்படுத்தித் தந்துள்ளதாம், இந்த நிலத்தை உழும் இயந்திரப் பிரிவு!

வடநாட்டில் உள்ள மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், அசாம் மாநிலங்களில்தான் இந்தப் பிரிவு பயன்படுத்தப்பட்டதாம்!

புதுவை மாநிலம் அபிவிருத்தியடைகிறதா?

இந்தியப் பேரரசு நிதி வழங்கும் இலட்சணம்

அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற புதுவை மாநிலத்தின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக இந்தியப் பேரரசு, இரண்டரை ஆண்டு காலத்தில் ரூ. 50 இலட்சம் மட்டுமே செலவு செய்திருக்கிறதாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் ரூ.4,76 50,000 செலவிட முன்வந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

ஒரு மருத்துவக் கல்லூரி நடத்தப்படுவதுமன்றி, சுமார் ரூ. 32 இலட்சம் செலவில் ஓர் புதிய கப்பல் துறை நிறுவவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறதாம்.

பல சிறிய தொழிற்சாலைகளுக்கு ரூ. 1 கோடியும், கிராமங்களுக்குத் தண்ணீர் வசதியை அதிகரிக்க ரூ. 25,67,000-மும் செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையிலிருந்து விவசாய அபிவிருத்திக்கு ரூ. 54,60,000 மட்டுமே செலவிடப்படுமாம்.

இரயில் விபத்தைக்காட்டி சர்க்காரை ஏமாற்ற நினைத்தவர்

போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்

ரூ. 55 ஆயிரம் நஷ்டஈடு கேட்டாராம்

ஐதராபாத், ஜுன் 19—

மெஹ்பூப் நகர் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க நியமிக்கப்பட்ட கமிஷனர் தன்னை ஏமாற்ற நினைத்த ஒருவரை போலீசில் பிடித்துக் கொடுத்திருக்கிறார் என்று தெரியவருகிறது.

ஒருவர், வழக்கறிஞர் மூலம் தனது குடும்பத்தைச் சேர்ந்த மூவர் விபத்தில் மாண்டதாகக் கூறி ரூ. 55,200 நஷ்டஈடு கோரியிருந்தாராம்.

விசாரித்ததில், இந்தக் கோரிக்கை ஏமாற்றும் நோக்கத்தோடு எழும்பியது எனத் தெரியவந்ததாம்; அதனால், நஷ்டஈடு கேட்டவரை கைது செய்ய போலீசுக்கு அனுமதி தந்ததுடன், இவருக்காக வாதாடிய வழக்கறிஞரின் ஒழுக்கக்கேடான செயல் குறித்தும் ஆந்திர உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருக்கிறார் கமிஷனர்.

ரூ. 5 இலட்சம் நஷ்டஈடு

மெஹ்பூப் நகர் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 5 இலட்சம் வரை நஷ்டஈடு வழங்கவும் கமிஷனர் உத்தரவிட்டிருக்கிறார்.

கேட்டீரா, சேதி!

புதுடில்லி, ஜுன் 19—

இரயில்களில் 3-வது வகுப்பு பிரயாணிகளுக்கு உட்காரவும், தூங்கவும் வசதி தரும் பெட்டிகள் இணைக்கப்படுமாம்.

இப்போது இருக்கும் மரப் பெஞ்சுகளுக்கு இரண்டு அங்குல கனமுள்ள மெத்தைகள் போடப்படுமாம்.

கீழே உள்ள பெஞ்சுகளில் உட்காரவும், மேலே உள்ள 'பெர்த்'களில் தூங்கவும் வசதியிருக்குமாம்.

பெட்டிகளில் சாமான்களை வைக்க ஒரு தனி அறை இருக்குமாம்; இந்த ஏற்பாட்டை கவனித்துக்கொள்ள ஒவ்வொரு பெட்டியிலும் 'கண்டக்டர்' என்பவர் இருப்பாராம்!

இத்தகைய வசதி எட்டுப் பிரிவுகளில் முதலில் ஏற்படுத்தப்படுமாம்.

இதற்கான புதிய பெட்டிகள் கட்டப்பட்டு வருகின்றனவாம்.

இந்தப் பெட்டிகளில் உள்ள 'பெர்த்'களில் தூங்குவதற்குக் கட்டணம் ரூ. 3 வசூலிக்கப்படுமாம்.

சென்னை மேல்சபை விரிவாக்கப்படுகிறது

புதுடில்லி, ஜுன் 22—

புதிய மாநில அமைப்பின் விளைவாக மாநிலங்களிலுள்ள மேல் சபைகளின் எண்ணிக்கை மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

சென்னை மேல்சபையில் தற்போது 50 உறுப்பினர்கள் உள்ளனர்; இனி 63 உறுப்பினர்கள் இடம் பெறுவார்கள்.

மற்றும், ஆந்திரத்தில் 90; பம்பாயில் 108; பீகாரில் 96; ம. பி.-யில் 90; மைசூரில் 63; பஞ்சாபில் 51; மே. வங்கத்தில் 75 ஆக மேல் சபையின் எண்ணிக்கைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

ரூ. 65 கோடி உணவுத் தானியங்கள் இறக்குமதி

அமெரிக்கா, பர்மா, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து ரூ. 65 கோடி மதிப்புள்ள, அரிசி, கோதுமை போன்ற உணவுத் தானியங்களை இவ்வாண்டில் பாகிஸ்தான் இறக்குமதி செய்யக்கூடுமாம்.

கழகச் செய்திகள்

பம்பாய்—கொலாபா

13—5—57 இரவு 9-30 மணிக்கு கூபரேஜ் திடலில் நடைபெற்ற கிளைக்கழக உறுப்பினர்மாதாந்திர கூட்டத்தில்கிளைக் கழக வரவு-செலவுகள் தயாரிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன. பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற கழகத் தோழர்கட்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

பேரம்பாக்கம் :

14—5—57 பிற்பகல் 3மணிக்கு கிளைக் கழகத்தில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், கிளைக் கழகச் செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அலங்கியம் :

15—5—57 இரவு, இவ்வூர் கிளைக் கழகச் சார்பில், தோழர் க. சா. பழனிவேலு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தி. மு. கழகக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

இராசிங்காபுரம் :

15—5—57 மாலை, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இராசிங்காபுரத்தில் தோழர் கிருட்டினன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகத் துவக்க விழாவில் தோழர்கள் கே. எஸ். சந்தானம், கலைமணி, முகதா ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கி உரை நிகழ்த்தினர்.

அன்று காலை 8 மணிக்கு மேற்படி கிளைக் கழகத்தின் நிர்வாகிகள் தேர்தலும் நடைபெற்றது.

உதகை :

15—5—57 இரவு மணிக்கு தோழர் என்.எஸ்.எம். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், டாக்டர் அழகப்பா, குமாரசாமி இராசா, தேவன், ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மன்னுடிமங்கலம் :

15—5—57-ல் சோழவந்தான் செல்வம் சைக்கிள் கடையில் தோழர் எஸ். செல்வத்துரை தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், கிளைக் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரியலூர் :

15—5—57 காலை 10 மணிக்கு திராவிட இளைஞர் மன்ற அலுவலகத்தில் தோழர் இரா. சின்னையன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருப்புத்தூர்—(இராமநாதபுரம்)

16—5—57 இரவு 9 மணிக்கு தோழர் கே. பொன்னையா தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் கிளைக் கழக வரவு—செலவுகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. மற்றும் சில முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொன்மலை —
மேலக்கற்கண்டார்கோட்டை

16—5—57 மாலை 7 மணிக்கு தோழர் கே. துரைராஜ் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், கழக 7-வது ஆண்டு விழா கொண்டாடுவது குறித்தும், மற்றும் சில பிரச்சினைகள் குறித்தும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இராமநல்லூர் :

'16—5—57 மாலை 5 மணிக்கு தோழர் ரா. க. சீனுவாசன் தலைமையில் கிளைக் கழக 3-வது ஆண்டு விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கா. அப்பாதுரை, பொன். சொக்கலிங்கம், லா. க. தர்மலிங்கம், தி. அ. இராசகோபாலன், தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

உட்கோட்டை :

16—5—57 மாலை 6 மணிக்கு தோழர் சந்திரகாசன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் க. அன்பழகன், அறிவுடைநம்பி, ம. கோ. மணி, முருகேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தாராபுரம் :

17—5—57 மாலை, இவ்வூர் கழக இல்லத்தில் நடைபெற்ற கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், கிளைக்கழகப் புத்தாண்டு நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குருபர அள்ளி :

17—5—57 இரவு 7 மணிக்கு குருபர அள்ளியில், ஊராண்மைக் கழக உறுப்பினர் - ஏ. கே. துரைசாமி அவர்கள் தலைமையில் கிளைக் கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் சரிவேங்கடம், சண்முகம், சிவப்பிரகாசம் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர். பின்னர் கழக நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருப்பரங்குன்றம் :

17—5—57 இரவு தோழர் வேலப்பன் இல்லத்தில் நடைபெற்ற திராவிடர் பகுத்தறிவு மன்ற (தி. மு. க. உட்கிளை) உறுப்பினர் கூட்டத்தில்,மேற்படி ஊரில் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டதுடன், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சிக்கத்தம்பூர்பாளையம் :

17—5—57ல்,இவ்வூர்ஊராண்மைக் கழகத் தலைவர் தீ. இராமசாமி தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் அன்பில் - தர்மலிங்கம், அழகமுத்து, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

உடுக்கம்பாளையம் :

18—5—57 இரவு 7 மணிக்கு உடுமலை வட்டம் உடுக்கம்பாளையத்தில் தி. மு. கழகத் துவக்க விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வே. காளியப்பன், ப. நாராயணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அத்தாணிபாடி :

18—5—57 மாலை, இவ்வூர் ரேடியோ மைதானத்தில் தோழர் பாபு தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் டி. பி. இராதா கிருஷ்ணன், ஜி. ஏ. வெங்கடாசலம், க. பெ. துரை, சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

புதுக்கோட்டை - (நெல்லை)

18—5—57ல், தோழர் எம்.எ. பெருமாள் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நடுவட்டம் :

18—5—57 இரவு 7 மணிக்கு தோழர் தே. நா. சுந்தரராசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழு கூட்டத்தில் தோழர்கள் பலர் பேசியபின், நடுவட்டம் ஊராட்சி மன்றத் தேர்தலில் கழகச் சார்பில் எல்லா வார்டுகளிலும் அபேட்சகர்களை நிறுத்துவதென்றும், கிளைக் கழகத்தில் உறுப்பினர்கள் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு குழு நியமிப்பதென்றும் ...

மேட்டுப்பாளையத்தில் மு.கருணாநிதி

நிகழ்ச்சிகள்

24—5—57 மாலை 5 மணிக்கு, தேவராயபட்டி செசவுத் தொழிலாளர்கள் தோழர் பி. ராமநாதன் தலைமையில், தோழர் மு. கருணாநிதி அவர்களுக்கு வரவேற்பு இதழ் வாசித்தளித்தனர்.

மாலை 6 மணிக்கு, மேட்டுப்பாளையம் ஊராட்சி மன்றச் சார்பில் ஊராட்சி மன்றத்தின் சமுதாய மண்டபத்தில் மு. கருணாநிதி அவர்களுக்கும் மற்றும் உள்ளூர் பிரமுகர்களுக்கும் ஓர் தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

6-30 மணிக்கு, ஊராட்சி மன்றத்தினர் கருணாநிதி அவர்களுக்கு வரவேற்பு இதழ் வாசித்தனர். வரவேற்புக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தோழர் கருணாநிதி அவர்கள் அரியதோர் கருத்துரை வழங்கினர்.

இரவு 7 மணிக்கு, பின்னாபாளையம் ஊராண்மைக் கழகத்தின் சார்பில் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது. பின்னர், பின்னாபாளையம் தி. மு. கழகக் கட்டிடத்தில் கொடியேற்றிவைத்தார்.

இரவு 8 மணிக்கு மேட்டுப்பாளையம் பஸ் நிலைய மைதானத்தில் தோழர் என். இராமலிங்கம் தலைமையில், தோழர்கள் ஏ. துரைராஜ், மு. பெ. முத்துகருப்பன், அ. ப. அழகமுத்து ஆகியவர்கள் பேசியபின், தோழர் மு. கருணாநிதி அவர்கள் சட்டசபை நிகழ்ச்சியைப் பற்றியும், தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் செய்த தில்லுமுல்லுகள் பற்றியும் விரிவுரையாற்றினர்.

இரவு 10-30 மணிக்கு, கரிகாலி கிராமத்தில் நடைபெற்ற தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர் கருணாநிதி அவர்கள் பேசினர்.

நியாய வாரச் சட்ட வழக்குகளில்!

விவசாயிகளின் செலவினங்களைக் குறைக்க வேண்டுகோள்

திருநெல்வேலி—

"விவசாயிகளுக்கும் நிலச்சுவான்தாரர்களுக்கும் உள்ள நியாய வாரத்தைப் பிரிப்பதற்கு 'ரெண்ட் கோர்ட்' எனப்படும் தாசில்தார் கோர்ட்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை விவசாயச் சட்டத்திலும் குறிப்பிட்டு அந்த அதிகாரத்தை ஆர். டி. ஓ. கோர்ட்டுக்கும் கொடுக்க வேண்டும்.

"விவசாயச் சட்டத்தின் கீழும், நியாயவாரச் சட்டத்தின் கீழும் வருகின்ற வழக்குகளில் விவசாயிகள் கட்டவேண்டிய 'ஸ்டாம்ப்' தொகைக்குச் சர்க்கார் விதிவிலக்கு அளிக்க வேண்டும்."

திருநெல்வேலியைச் சேர்ந்த சிந்தம்பூந்துறை கட்டபொம்மன் திடலில் கடந்த திங்கள் 23-ந் தேதி நடைபெற்ற கே. வி. கே. சாமி நினைவு மன்றப் பொதுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மேற்படி பொதுக்கூட்டம் தோழர் இரத்தினவேல் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. தோழியர் சத்தியவாணிமுத்து, டி. துரைசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சிந்துப்பூந்துறைப் பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு நல்ல முறையில் தண்ணீர் வசதி செய்து தருமாறு, அந்த வார்டு நகரசபை உறுப்பினரைக் கேட்டுக் கொண்டும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (ந. கி.)

என். வி. நடராசன் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

காவேரிப்பட்டணம் :

சேலம் மாவட்டம் காவேரிப்பட்டணம் தி. மு. கழகச் சார்பில் 9—6—57 மாலை 6-மணிக்கு காந்தி திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஏராளமான தோழர்களும், தாய்மார்களும் திரண்டிருந்தனர். தோழர் வி. ஏ. கந்தசாமி தலைமை வகித்தார். தோழர் இரா. செகநாதன் அவர்கள் கழகக் கொள்கையை விவரித்துப் பேசினர். அடுத்து துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் டெல்லி ஆட்சிபீடத்தின் வரிக்கொடுமைகளைக் கண்டித்தும், தமிழ் மாநில ஆட்சியாளரின் துரோகத்தை விவரித்தும் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

சோடா பாக்டரி தொழிலாளர்கள், வள்ளுவர் படிப்பகம், வெங்கடேசுவரா ஆயில் மில்ஸ் ஆகியவைகளின் சார்பிலும் கிளைக் கழகங்கள் சார்பிலும் கைத்தறி ஆடைகள், மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

மாலை 4 மணிக்கு, மேளவாத்தியங்கள் முழங்க, என். வி. நடராசன் அவர்களையும், மற்ற தோழர்களையும் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்; ஊர்வலத்தில் ஏராளமான தோழர்கள் அணிவகுத்து வந்தனர்.

சென்னுக்கல்பாளையம் :

கோவை-தாராபுரம் வட்டம் சென்னுக்கல் பாளையம் தி. மு. கழகத் துவக்க விழா 10—6—57 மாலை 7 மணிக்கு சிறப்புற அமைக்கப்பட்ட பந்தலில் நடந்தேறியது. தோழர் ப. முத்துச்சாமி தலைமை வகித்தார். கிராம மக்கள் - தாய்மார்கள் உள்பட ஏராளமாகக் கூடியிருந்தனர்.

கன்னிவாடி கே. எஸ். எஸ். பெரியசாமி, மூலனூர் கந்தசாமி, தாரை சின்னராஜ் ஆகியோர் பேசினர்.

இறுதியாக என். வி. நடராசன் அவர்கள் கழகக் கொள்கைகளை விவரித்தும், எட்டு ஆண்டுகளாக ஆற்றிவரும் பணியினையும், காங்கிரஸ் ஆட்சியின் கொடுமைகளை விளக்கியும் பேசினர்.

துவக்கத்தில், கழகக் கொடியினை பொதுச்செயலாளரால் உயர்த்திவைக்கப்பட்டது. கிளைக் கழகங்கள், சார்பு மன்றங்கள் ஆகியவைகளின் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

வரப்பாளையம் :

தாரை வட்டம் வரப்பாளையம் தி. மு. கழகத் துவக்க விழா 11—6—57 மாலை 7 மணிக்கு சிறப்புற நடந்தேறியது. உள்ளூர் முக்கியஸ்தர்களும், விவசாயத் தொழிலாளர்களும் ஏராளமாக வந்திருந்தனர். கூட்டத்திற்குத் தோழர் ஆர். பி. கோவிந்தசாமி தலைமை வகித்தார். கன்னிவாடி பெரியசாமி சேங்கராயர் கழகக் கொடியை உயர்த்திவைத்தார். அடுத்து தோழர்கள் கந்தசாமி, துரைசாமி, தாரை சின்னராஜ், மேடைவலசு சிதம்பரனார் ஆகியோர் பேசியபின் என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்து விரிவுரையாற்றினர்.

மணத்திடல் கருப்பூர் :

தஞ்சை மாவட்டம் பூதலூர் அடுத்த மணத்திடல் கருப்பூர் தி. மு. கழகச் சார்பில் 12—6—57 மாலை 6 மணிக்கு, குடமுருட்டி ஆற்றில் தோழர் இரா. மருதையா தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் முத்தண்ணன் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர். அடுத்து தோழர் என். வி. நடராசன் அவர்கள், காங்கிரஸ் ஆட்சியின் அநீதிகளை எடுத்துக் காட்டி, அதனை ஒழித்து நல்லதோர் ஆட்சி முறை வகுக்க தனிநாட்டு உரிமை மிக அவசியம் என்பதை விளக்கினர்.

தி. மு. க கிளைகள், சார்பு மன்றங்கள் ஆகியவைகள் சார்பில் துணைப் பொதுச்செயலாளருக்கு மலர்மாலைகள், கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

கழகக் கட்டிடத் திறப்பு விழா

அன்று மாலை 4 மணிக்கு, நாதசுர வாத்தியம் முழங்க, சிலம்ப விளையாட்டுகளுடன் ஏராளமான விவசாயத் தொழிலாளர்கள் திரண்டுவர ஊர்வலம் ஒன்று புறப்பட்டு புதிதாக அமைக்கப்பட்ட கழகக் கட்டிடத்தை வந்து சேர்ந்தது. பின்னர் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், மணத்திடல் கருப்பூர் தி. மு. கழகக் கட்டிடத்தைத் திறந்துவைத்தார்.

மதுக்கூர் :

தஞ்சை மாவட்டம் மதுக்கூர் தி. மு. கழகச் சார்பில் சினிமாக் கொட்டகையில் 13-6-57 இரவு 7 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. மழையாயிருந்தும் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். உள்ளூர் செயலாளர் டாக்டர் கரீம் தலைமை வகித்தார். தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் என். எஸ். இளங்கோ அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கியும், அண்மையில் நடைபெற்ற தேர்தலில் ஆட்சியாளர் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்த ஜனநாயகமற்ற போக்கினையும் விவரித்துப் பேசினர்.

பின்னர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் இந்திய அரசியலாரின் வரிக் கொடுமைகளையும், காங்கிரஸ் ஆட்சியினர் கையாண்டுவரும் சர்வாதிகாரப் போக்கினையும் விளக்கியதுடன், இக்கொடுமைகளை ஒழிக்க திராவிடம் தனி உரிமை பெறவேண்டிய அவசியத்தை வற்புறுத்தியும் பேசினர்.

வட மதுக்கூர் :

அன்று மாலை 5-30 மணிக்கு வட மதுக்கூர் தி. மு. கழகக் கிளையைத் துவக்கிவைத்து தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் கழகக் கொள்கையை விவரித்துப் பேசினர். பின்னர் கடைவீதியிலிருந்து துணைப் பொதுச்செயலாளரையும், தஞ்சை மாவட்ட செயலாளரையும் பொதுக்கூட்டத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

தெலுங்கன்குடிக்காடு :

ஒரத்தநாடு அடுத்த தெலுங்கன்குடிக்காடு தி. மு. கழகத் துவக்க விழா 14—6—57 மாலை 6 மணிக்கு அழகிரி அரங்கில் சிறப்புற நடந்தேறியது. தோழர் குமாரசாமி (சேதுரார்) தலைமை வகித்தார். ஒரத்தநாடு வட்ட தி. மு. கழகச் செயலாளர் டி. எம். தயிலப்பன் கழகக் கொடியை உயர்த்திவைத்தார். தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் கழகக் கொள்கைகளை விவரித்துப் பேசினர்.

பின்னர், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்து, காங்கிரஸ் ஆட்சியின் வரிக் கொடுமைகளையும், தமிழ் மாநில அமைச்சர்களின் துரோகத்தையும் விவரித்துப் பேசினர்.

தோழர் உலகப்பன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது. கைத்தறி ஆடைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

மற்றும் சில முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

உடையாளூர் :

18—5—57 குடந்தை வட்டம் உடையாளூரில், தோழர் சு.பத்மநாபன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், கழக நிர்வாகிகள், செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

‘அங்கேரி புரட்சி தேசீய எழுச்சியே’

‘ரஷ்ய ராணுவம் அதை ஒடுக்கியது என்பதில் சந்தேகமே இல்லை’

‘பஞ்சசில’ப் போதகரின் கருத்து

ஓஸ்லோ, ஜூன் 22—

“கடந்த ஆண்டு அங்கேரியில் எழுந்த புரட்சி, பொதுவாக ஒரு தேசீய எழுச்சியே; அந்தத் தேசீய எழுச்சி, ரஷ்ய இராணுவத்தினால் அடக்கி ஒடுக்கப்பட்டது என்பதில் சந்தேகமே இல்லை,”

என்று, ‘பஞ்சசிலப்’ போதகர் பண்டித நேரு இங்கு பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

“இந்த அங்கேரி எழுச்சியும், புரட்சியும் நமது காலத்திய மிகப் பெரும் சோக வரலாறு ஆகும்”

என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

“இந்தச் சோக வரலாறு, பிறரது கவலைக்குரியது என்றாலும், அங்கேரி மக்களுடைய கவனத்திற்கே பிரதானமாக உரியதாகும். இந்த விவகாரத்தை அங்கேரி மக்களின் நலன்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பரிசீலிக்க வேண்டுமே தவிர, சர்வதேச விளையாட்டு அரங்கில், அங்கேரி ஒரு காயாகப் படுத்தப்படக் கூடாது”

என்றும், பண்டித நேரு கூறினார்.

தாம்பரம் - விழுப்புரம் மின்சார இரயில்பாதை அமையுமா?

அந்நிய தொழில் நுணுக்க உதவியைப் பொறுத்துள்ளதாம்

புதுடில்லி, ஜூன் 22—

தாம்பரம் முதல் விழுப்புரம் வரையில் மின்சார இரயில் பாதை போடுவதற்கான திட்டத்திற்கு அந்நிய தொழில் நுணுக்க உதவி தேவைப்படுகிறதாம். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பது, இந்த முயற்சியின் விளைவைப் பொறுத்ததாம்.

மதம் மாறியவர்கள் மீது பாய்ச்சல்

சாவனின் ‘இந்து மத’ வெறி?

பம்பாய், ஜூன் 22—

புத்த மதத்தில் புதிதாக சேர்ந்துள்ள ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள்மீது பம்பாய் அரசாங்கத்தின் மறைமுகப் பழிவாங்கு படலம் ஆரம்பமாகிவிட்டது.

மதம் மாறியவர்களுக்கு அளிக்கப்பட்ட கல்வி வசதி நிறுத்தப் பட்டுள்ளது; வேலை, மற்ற வசதிகளைக்கூட அவர்கள் இழக்க வேண்டியுள்ளது.

இந்த அநியாயத்தைச் சுட்டிக் காட்டி சட்டசபையில் கேட்கப்பட்டபோது, முதலமைச்சர் சாவன் பதிலளிக்கையில், ‘புத்த மதத்தில் புதிதாகச் சேர்ந்தவர்களில் ஒரு சிலர் ‘புத்தஸ்தான்’ தனிஅரசு ஏற்படுத்த எண்ணிக் கொண்டிருக்கின்றனர்’ என்று கூறி, மதம் மாறியவர்களின் உள்நோக்கையே தான் சந்தேகிப்பதாகக் கூறியுள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகங்கள்

ஒவ்வொன்று பற்றியும் விசாரணை

பம்பாய், ஜூன் 22—

மக்கள் மீது நடத்தப்படும் துப்பாக்கிப் பிரயோகங்கள் ஒவ்வொன்று பற்றியும்—உயிரிழப்பு இருந்ததோ இல்லையோ, ஒரு வட்டார நீதிபதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கொள்கையை பம்பாய் சர்க்கார் ஏற்றுக் கொண்டிருப்பதாக முதன்மந்திரி ஒய். பி. சாவன் கூறியிருக்கிறார்.

அவசியமேற்பட்டால் நீதிபூர்வ விசாரணையும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

விவசாய வருமான வரி

மாநிலங்களுக்கு டில்லி தாக்கீது

புதுடில்லி, ஜூன் 22—

விவசாயத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மீது வசூலிக்கப்படும் வரி மாநிலங்களுக்கு இடையே வேறுபட்டுள்ளதாம்.

எல்லா மாநிலங்களிலும் இவ்வரியை ஒரேமாதிரியான முறையில் வசூலிக்கப்பட வேண்டும் என்றும், ரூ. 3,000-க்கு மேற்பட்ட வருமானம் உள்ளவர்களிடமே வரி வசூலிக்கப்பட வேண்டும்என்றும் மாநிலங்களுக்குடில்லி தாக்கீது பிறப்பித்துள்ளது.

பழைய பல்லவியே!

ஓஸ்லோ, ஜூன் 22—

“நினைத்தால் இந்தியத் துருப்புகள் சில நாட்களில் கோவாவை கைப்பற்றிவிட முடியும்; ஆனால் இந்தியா பலாத்காரத்தை உபயோகிக்க விரும்பவில்லை,”

என்று, பண்டித நேரு நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

பொறியியல் கல்வி பயில இடமில்லையாம்!

மாணவர்களுக்கு ஏமாற்றம்

சென்னை, ஜூன் 22—

அபிவிருத்தித் திட்டங்களுக்குப் போதிய பொறியியல் பயிற்சிபெற்றோர் இல்லாத குறைபாடு நாட்டில் நீடித்துவரும் இந்த நேரத்தில், பொறியியல் கல்வி பயில விரும்பும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குக் கல்லூரிகளில் வசதி செய்துதர முடியாத நிலையில் அரசாங்கமிருக்கிறதென்பது வெளிப்படையாகத் தெரிய வருகிறது.

சென்னை மாநிலத்திலுள்ள கோவை கல்லூரியில் 100 மாணவர்களுக்கும், சென்னை கல்லூரியில் 250 மாணவர்களுக்கும் ஆக 350 மாணவர்களுக்கு மட்டுமே இடவசதியுள்ளதாம்.

மொத்தம் 2,500-க்கு மேற்பட்ட மாணவர்கள் பொறியியல் கல்வி பயில மனுச் செய்து கொண்டுள்ளனராம்.

மாயூரம் தொகுதி

தேர்தல் வழக்கு விசாரணை

நாகை, ஜூன் 21—

இன்று, மாயூரம் தொகுதி தேர்தல் வழக்கு விசாரணை, நாகை மாவட்ட நீதிபதி (டிரிபியூனல்) முன்னிலையில் துவங்கி, 28—6—57-க்கு ஒத்துவைக்கப்பட்டது.

அன்று விசாரணை ஆரம்பமாகி வழக்கு விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ந. நி.)

ரூ. 50 இலட்சம் செலவில் பயிற்சியளிக்கத் திட்டம்

தண்ணீர் விநியோகம், பொது சுகாதார முன்னேற்றம் ஆகியவற்றில் மத்திய அரசாங்கத்திற்கு அக்கறை பிறந்துவிட்டது. இத்துறையில் ரூ. 50 இலட்சம் செலவிட்டு பொறியியல் நிபுணர்களுக்குப் பயிற்சியளிக்க இப்போது முடிவு செய்துள்ளனராம்.

மு. கருணாநிதி விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லிஸ்’ போன்ற கடவுள்கள் இருந்தார்கள்; ‘இருந்தார்கள்’ என்று சொல்வதை மகிழ்ச்சியோடு சொல்கிறேன். ஆனால் இந்த நாட்டில் கடவுள்கள் இருக்கிறார்கள்; ‘இருக்கிறார்கள்’ என்பதை கவலையோடு குறிப்பிடுகிறேன். அங்கே, ‘இருந்தார்கள்’ என்ற இறந்த கால நிகழ்ச்சியாகிவிட்டார்கள் கடவுள்கள்; ஆனால் இங்கே, ‘இருக்கிறார்கள்’ என்ற நிகழ்கால நிகழ்ச்சியாக இருக்கிறார்கள் கடவுள்கள்.

“ஆனால் அங்கே அந்தக் கடவுள்களே இல்லையாயென்றால், இருக்கிறார்கள் சைக்கிள்களின் ‘டிரேட் மார்க்’காக! அந்தக் கடவுள்களை அங்கே காட்சிசாலையில் வைத்துவிட்டார்கள். சிலர் கேட்கக்கூடும்—‘என் இங்கே மட்டும் கடவுளர்கள் ‘டிரேட்மார்க்’ காக இல்லையா? சுருட்டுகளுக்கும்—புகையிலைக்கும் ‘டிரேட் மார்க்’காக இல்லையா?’—என்று! எனினும், கண்காட்சிக்குப் போக வேண்டிய கடவுள்களெல்லாம் இன்னும் ஆலயங்களிலும், அரச மரத்தடியிலும் இருக்கின்றதே!

“நாம் இப்படிக் கூறுவதால், ‘பார்—பார்; திராவிட முன்னேற்றக் கழகத்தவர் கடவுளை மறுக்கின்றனர்!’—என்று கூறுவார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் கடவுளை மறுத்தது கிடையாது; அது, ‘ஒன்றே குலம்—ஒருவனே தேவன்,’ என்ற திருமூலர் கடவுட்கொள்கையைத்தான் வலியுறுத்திவருகிறது.

“திராவிட முன்னேற்றக் கழகம் பாட்டாளியின் முகம் மலர்ந்த சிரிப்பை—அந்தக் காட்சியை, கடவுளாகக் கருதுகிறது.

“பாட்டாளி அழும்போது, ‘ஐயோ, இந்தப் பாட்டாளி அழுகிறானே!’—என்று இரக்கப்படும் உள்ளத்தை கடவுளாகக் கருதுகிறது.

“நாம் மட்டுமா கடவுளைப் பற்றி இவ்வாறு கூறிவருகிறோம்? இதைப்பற்றி சிவவாக்கியர் கூறுகிறாரே—‘நட்டக்கல்லை தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே—சுற்றிவந்து மொனமொனன்னு சொல்லும் மந்திரம் ஏதடா?’—என்று.

“இராமலிங்க அடிகள் கூறியிருக்கிறாரே — ‘கண்மூடி வழக்கமெல்லாம் - மண்மூடிப் போக!’ —என்று! இப்படிக் கூறியதால் தானே அவர் ஓர் அறையிலே பூட்டி படுகொலை செய்யப்பட்டு, ‘அவர் ஜோதியிலே கலந்துவிட்டார்’ என்று சொல்லி, ‘கடவுளாக்கப்பட்டார்’ என்று வரலாறு சொல்லப்படுகிறதே!

“காந்தியார் என்ன சொன்னார்? - ‘கோயில் ஓர் விபசார விடுதி’ — என்று சொன்னாரே!

“எல்லோரும் சொன்னார்கள்; ஆனால் அவர்கள், சமுதாயத்திலுள்ள முடப் பழக்க வழக்கங்களை ‘காலிலே குத்தப்பட்ட முள்’ளாகக் கருதி, அவர்கள் காலத்திலே அந்த முள்ளை எடுத்து மீண்டும் அதே பாதையிலேயே போட்டு விட்டுத்தான் சென்றார்களே தவிர, அதைப் பாதை ஓரமாகப் போடவில்லை நாம்தான் அதை பாதை ஓரமாகப் போட்டு நமக்குப் பின்னால் வருவோர் காலில் குத்தாமலிருக்கட்டும் என்று கருதி பணியாற்றி வருகிறோம்.

“நம்மை, ‘கடவுளைத் திட்டுகிறவர்கள்’ என்று வேறு குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் உண்மையில், கடவுளை நாங்கள் ஒன்றும் திட்டவில்லை.

“மூட்டைத் தூக்கும் முனியன் தன் முதுகெலும்பு வளையும் மட்டும் தூக்கிச் சென்று அதற்கு சரியான கூலி கொடுக்கப்படாததால், அவன் வேதனையோடு திட்டுகிறான்—‘அட, நாசமாய்ப் போன கடவுளே! உனக்கு இரக்கம் என்பதேஇல்லையா?’—என்று! நாங்கள் திட்டவில்லை; அவன் திட்டுகிறான்—‘நாசமாய்ப் போன கடவுளே!’ என்று!

“அய்யரை வைத்து, அருந்ததி பார்த்து, சடங்கு சம்பிரதாயத்தோடு மணம் செய்து கொண்ட ஒரு பெண், மணமான மூன்றும் மாதத்தில் கணவனை இழந்து ‘கைம்பெண்’ணாகி விட்டால், அவள் திட்டுகிறாள்—‘அட கடவுளே! மணம் முடிந்த மூன்றும் மாதத்திலேயே கணவனைப் பிரித்து விட்டாயே! நீ நன்றாக இருப்பாயா? நாசமாகத்தான் போவாய்!’—என்று! நாமா திட்டுகிறோம் கடவுளை?

“எங்கெங்கே வாட்டம் தேளெனக் கொட்டுகிறதோ—எங்கெங்கே வேதனை ஏற்படுகிறதோ அங்கெல்லாம் கடவுளைத் திட்டுகிறார்கள்; நாமல்ல திட்டுவது!

“வள்ளுவர் கூறினார்—‘மழித்தலும் நீட்டலும் வேண்டாவுலகம்-பழித்ததொழித்துவிடின்’ என்றார்; அதாவது, சான்றோர் கூறிய ஒழுக்க நெறியில் இருப்பவர்கள் தங்கள் துறவு நிலையைக் காட்ட, தலையை மொட்டையடித்துக்கொள்ளவோ அல்லது வளர்க்கவோ மாட்டார்கள்; அப்படி மொட்டையடித்துக் கொள்பவர்களோ அல்லது தலைமுடியை வளர்ப்பவர்களோ போலித் துறவிகள்தான் என்ற பொருள்படக் கூறினார். ஆனால் அப்படிச் சொன்னவருக்கே பெரிய ‘ஜடாமுடி’யை வைத்து விட்டார்கள்.

“புத்தர் சொன்னார்-‘கடவுள் பெயரைச் சொல்லி ஏமாற்றாதே’ என்று! அப்படிச் சொன்னவர், கடவுளான விந்தையைக் காண்கிறோம்.

“சாதிக்கொடுமையால் பாதிக்கப்பட்ட நந்தனாரை தீயிலே பொசுக்கிவிட்டு, ‘அவர் தீக்குளித்துவிட்டார்’ என்று சொன்னார்கள்.

“இப்படி நல்ல பல கொள்கைகளைச் சொன்னவர்களெல்லாம் அழிக்கப்பட்டு தெய்வங்களாக்கப் பட்டார்கள் இந்த நாட்டிலே! இதை யெல்லாம் எடுத்துச் சொல்லி, சமுதாயத்திலே உள்ள மாசு மருக்கள் அகற்றப்பட வேண்டும் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடுகிறது.”

கழகக் கூட்டம்

★

லெப்பைக்குடிக்காடு :

ரேடியோ மைதானத்தில் 26—6—57 மாலை 5 மணிக்கு தி. மு. கழக 4-வது ஆண்டுவிழா

தலைவர் : ஒய். கரீம்

பேசுவோர் :

இரா. நெடுஞ்செழியன்
இரா. நாராயணன்
தர்மலிங்கம்
நாகசுந்தரம்
க. அமராவதி

சொற்பயிற்சிக் கூட்டம்

26—6—57 மாலை 6-மணிக்கு சேலம் — அம்மாப்பேட்டை 23-வதுவட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் கே. எம். கிருட்டினன் அவர்கள் இல்லத்தில், தோழர் பி. ஏ. தேசிகன் தலைமையில் ‘சமூகம்’ எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

முத்தமிழ் வளர்ச்சி மன்ற முதலாண்டு விழா

25—6—57 மாலை 6-மணிக்கு சென்னை—பெரம்பூர் எரி மைதானத்தில், தோழர் எம். பி. கபிலன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் கண்ணதாசன், க. அறிவழகன், டி. நாராயணன் ஆகியோர் பேசுவர்.

கத்தியால் குத்தியதாக

திராவிட கழகத்தவர் மீது வழக்கு

சேலத்தில் சம்பவம்

சேலம், ஜூன் 23—

இரவில் நெசவு செய்வதற்காக பாவு எடுத்துச் சென்றபோது, கத்தியால் குத்திவிட்டதாக திராவிட கழகத்தைச் சேர்ந்த அன்பானந்தன் என்பவர்மீது தி. மு. கழகத்தைச் சேர்ந்த தோழர் கிருஷ்ணசாமி என்பவர் செவ்வாய்ப்பேட்டை போலீசில் புகார் செய்துள்ளார்.

தோழர் கிருஷ்ணசாமி போலீசாரிடம் கொடுத்துள்ள புகாரில் கூறியிருப்பதாவது :—

“நான் செவ்வாய்ப்பேட்டை அருணாசலசெட்டித் தெருவில் குடியிருக்கிறேன். 21-ந் தேதி இரவு 1 மணிக்கு, நெசவு செய்வதற்கான பாவு முதலிய சாமான்களை எடுத்துக்கொண்டு செவ்வாய்ப்பேட்டை இரயில்வே ஸ்டேஷன் பக்கம் சென்றேன்; அப்பொழுது திடீரென அன்பானந்தன் என்பவர் என்னை வலது கையிலும், வயிற்றிலும் கத்தியால் குத்தினார். நான் கையில் சாமான்கள் வைத்திருந்ததால் அவரைப் பிடிக்க முடியவில்லை; அன்பானந்தன் ஓடிவிட்டார்.

“நான் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவன்; அன்பானந்தன் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவர்; நான் தி. மு. கழகத்தைச் சேர்ந்ததால் என்னை கட்சித் தகராறினால் திராவிட கழகத்தைச் சேர்ந்த அன்பானந்தன் கத்தியால் குத்திவிட்டார்.”

கத்தியால் குத்தப்பட்ட தி. மு. கழகத் தோழர் கிருஷ்ணசாமி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார். செவ்வாய்ப்பேட்டை போலீஸ் சப் - இன்ஸ்பெக்டர் எஸ். கோபாலகிருஷ்ண அய்யர், அன்பானந்தன் மீது 324 இ.பி.கோ. பிரிவின்கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார். போலீசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர். (ந. நி.)

மேட்டூர் ஆலையில்

வேலை நிறுத்த எதிரொலி!

கழகத் தோழர்கள் உள்பட 64 பேர் மீது வழக்கு

மேட்டூர், ஜூன் 20—

கடந்த மே மாதம் 23-ந் தேதி முதல் 8 நாள்கள் தொடர்ச்சியாக மேட்டூர் மில், தொழிலாளர் மேற்கொண்ட வேலை நிறுத்த நடவடிக்கை காரணமாக மூடப்பட்டுக்கிடந்தது.

அந்த 8 நாட்களிலும், தொழிலாளர்கள் அனைவரும் மிக்க அமைதியுடன் இருந்தபோதும், போலீசார், அமைதிக்குப் பங்கம் விளைவித்தனர் என்று காரணங் காட்டி, மேட்டூர் தி. மு. கழகத் துணை செயலாளரும் மேற்படி மில் தொழிலாளர் சங்கத்தின் கிளைச்செயலாளருமான தோழர் அ. பாலு, மற்றும் 4 கழகத் தோழர்கள் உள்பட, பல கட்சித் தோழர்களையும் சேர்த்து மொத்தம் 64 பேர் மீது வழக்கு தொடர்ந்திருக்கின்றனர் எனத் தெரிகிறது. (ந—நி)

சென்னை—எஸ்பிளனேடு

ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம்

25—6—57 மாலை 6-மணிக்கு மேற்படி பட்டி மன்றத்தில் திரு. ஊ. செயராமன் அவர்கள் தலைமையில் திரு. மா. இளஞ்செழியன் அவர்கள் ‘நயா பைசா சிக்கல்’ எனும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.